2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 10/1984).

2. 1984 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச்) சட்ட முன்வடிவு எண் 40/1983).

3. கவன ஈர்ப்பு

கரூர், தூத்துக்குடி அகல ரயில் பாதைத் திட்டத்தை மத்திய அரசு துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொள்ளாததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

" கரூர், தூத்துக்குடி அகல ரயில் பாதை திட்டத்தை மத்திய அரசு துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ளாததால் மக்கள் மத்தியிலும், தமிழக வணிகர் கழகங்களின் மத்தியிலும் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து ".

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை, திருச்சி, பெரியார் இந்த 3 மாவட்டங்களும் சந்திக்கும் இடத்திலே பணப் பயிர் உற்பத்தி செய்யக்கூடிய பெரும் பிரதேசம் இரயில் வசதியற்று இருப்பதை மாற்றி அங்கே போக்குவரத்து வசதி செய்து கொடுப்பதற்கும் கர்நாடக மாநிலத்தோடு சுலபமாகத் தொடர்பு கொள்ளவும், தூத்துக்குடி துறைமுக அபிவிருத்திக்கும் இந்தக் கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதை பயன்படுமென்று தான்